மாதிரி வினாத்தாள் – 01

விடைக்குறிப்புக்கள்

## பகுதி I

| | |
|---|---|
| 1. 4 | 21. 3 |
| 2. 2 | 22. 2 |
| 3. 1 | 23. 4 |
| 4. 3 | 24. 1 |
| 5. 1 | 25. 3 |
| 6. 4 | 26. 2 |
| 7. 2 | 27. 1 |
| 8. 4 | 28. 3 |
| 9. 1 | 29. 2 |
| 10. 3 | 30. 4 |
| 11. 2 | 31. 2 |
| 12. 4 | 32. 3 |
| 13. 3 | 33. 4 |
| 14. 1 | 34. 2 |
| 15. 4 | 35. 1 |
| 16. 1 | 36. 3 |
| 17. 2 | 37. 1 |
| 18. 4 | 38. 3 |
| 19. 2 | 39. 2 |
| 20. 3 | 40. 4 |

## பகுதி – II

1. சுருக்கமான விடை தருக.

(i) மானமே + புரப்பது + அவனி + மேல் + எவர்க்கும்

(ii) எழுவாய் - அன்பின் ஊற்று
பயனிலை – கழுவிவிடும்

(iii) "வினுகுட்டிக்கு, அம்மா இன்னும் வரவில்லையே, இனி வந்திடுவா என்ன?" என்று சொல்லிவிட்டுப் போனான்.

(iv) எச்சம் - நீளும் வழி நெடு தன்னந்தனியாக நடந்தேன்
முற்று - இரும்பு கம்பிகள் வெப்பமடையும் போது நீளும்.

(v) அடுத்த வருடம் தமிழாராய்ச்சி மாநாடு இலங்கையில் நடைபெறாது

(vi) வேற்றுமைத்தொகை, பண்புத்தொகை

(vii) இருபக்கமும் துன்பம்

(viii) தற்பவம் - புருடன், அனுமான்
தற்சமம் - அனுகூலம், காரணம்

(ix) அறிவுடையார் தம்மை புகழ்ந்து பேசமாட்டார்கள் ஆனால் கல்லாதவர்கள் தம்மைத்தாமே புகழ்ந்து பேசிக்கொண்டே இருப்பார்கள்.

(x) அந்த பலாமரத்திலுள்ள ஒவ்வொரு கனியும் சுவையானதாக இருந்தது.

2. வினா இல. 02 புள்ளித்திட்டம்

| | | |
|---|---|---|
| (அ) | பொருளமைவும் அளவும் | 12 புள்ளிகள் |
| (ஆ) | கருத்து வெளிப்பாடும் மொழிச்செம்மையும் | 06 புள்ளிகள் |
| (இ) | எழுத்து நுட்பங்கள் | 05 புள்ளிகள் |
| (ஈ) | தலையங்கம் | 02 புள்ளிகள் |
| | **மொத்தம்** | **25 புள்ளிகள்** |

**(i) கட்டுரை**

- மாதிரி தலைப்புகள்
  - பொருளாதார நெருக்கடியும் மீட்சியும்
  - பொருளாதார நெருக்கடியில் நம்பங்கு
  - இலங்கையின் பொருளாதாரமும் நாமும்
- அறிமுகம்
  - பொருளாதார நெருக்கடி பற்றிய அறிமுகம்
- பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட விளைவுகள்
- மீட்சிக்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள்
- பொதுமக்கள் மீதான சுமைகள்
- பொருளாதார மீட்சி தொடர்பாக மாணவர்களின் பொறுப்பு
- முடிவுரை

**(ii) உரையாடல்**

- மாதிரி தலைப்புகள்
  - சமூக ஊடகங்களும் விளைவுகளும்
  - சமூக ஊடகங்களும் நாமும்
  - சமூக ஊடகளின் நன்மை தீமைகள்
- அறிமுகம்
  - சமூக ஊடகங்கள் என்றால் என்ன?
- சமூக ஊடகங்களால் பெறக்கூடிய நன்மைகள்
- சமூக ஊடகத்தினை தவறாக பயன்படுத்துதல்
- சமூக ஊடகத்தினை தவறாகப் பயன்படுத்துவதனால் ஏற்படக்கூடிய விளைவுகள்
- உரையாடல் பாங்கில் அமைந்திருத்தல் வேண்டும்.

**(iii) மேடைப்பேச்சு**

- மாதிரி தலைப்புகள்
  - போதையால் மாறும் பாதை
  - போதையால் சீரழியும் சமூகம்
- அறிமுகம்
  - போதைப்பொருள் தொடர்பான அறிமுகம்
- சிறுவர்களை கவரும் வகையிலான போதைப்பொருள்
- போதையால் பாதை மாறும் இளையோர்
- போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் விளைவுகள் - பண வீண்விரயம், உடல் வலிமை இழத்தல், அவர் சார்ந்த குடும்பமும் ஏனையோர் அடையும் துன்பங்கள், நிம்மதியின்மை, எதிர்காலம் இல்லாமல் போதல், உயிரிழப்பு
- பொருத்தமான முடிப்பு
  (மேடைப் பேச்சு அமைப்பில் இருத்தல் வேண்டும்)

**(iv) சிறுகதை**

- மாதிரி தலைப்பு
  - தவறான தொலைபேசி பாவனை
  - கட்டுப்பாடில்லாத தொலைபேசி பாவனையும் விளைவுகளும்
  - கனவு கலைகிறது
  - ஏமாற்றம்
- சிறுகதை அமைப்பு பேணப்படல் வேண்டும்
- வழங்கப்பட்ட கருப்பொருளுக்கு அமைய கற்பனை செறிவுடன் எழுதுதல்
- கதையை யதார்த்தமானதாகவும் நயமாகவும் சுவையானதாகவும் விறுவிறுப்புடனும் நகர்த்தி செல்லுதல்.
- பொருத்தமான மொழிநடை
- சூட்சுமமாக படிப்பினையை வெளிப்படுத்தல்
- பொருத்தமான முடிவு

**3. சுருக்கம்**

- தொலைக்காட்சியில் பல்வேறு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகின்றன.
- பொழுதுபோக்கு, குடும்பநலம் சார்ந்த வேளாண்மை என இவற்றை வகைப்படுத்தலாம்.
- கல்வி நிகழ்வுகளும் முறைசாரா கல்வி நிகழ்ச்சிகளும் ஒளிப்பரப்பாகின்றன.
- எதிர்மறை உணர்வுகளை தூண்டக்கூடிய நிகழ்ச்சிகள் இடம்பெறல்.
- தவறான பாதையில் இட்டுச்செல்லக்கூடிய நிகழ்ச்சிகள் காணப்படல்.

| | |
|---|---|
| விடய உள்ளடக்கம் | - 06 புள்ளிகள் |
| சொல்லளவு | - 02 புள்ளிகள் |
| மொழிநடை | - 02 புள்ளிகள் |

- 40 – 45 சொற்களுக்குள் இருத்தல் எதிர்பார்க்கப்படுகிறது.
- 35 – 50 சொற்கள் வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
- 35 சொற்களுக்குக் குறைவாகவோ 50 சொற்களுக்குக் கூடுதலாகவோ இருந்தால் சொல்லளவிற்கான ஒரு புள்ளியினைக் குறைக்கவும்.
- சொல்லளவு 50 ற்கு மேற்படின் 50 சொற்களை எல்லையாகக் கொண்டு அதற்குள் எழுதப்பட்ட விடயங்களை அனுசரித்து புள்ளிகளை வழங்கவும்.
- சொல்லளவு 35 இற்கு குறைவாக இருப்பின் பிரதான கருத்தின் சராம்சங்களை அடிப்படையாகக் கொண்டு புள்ளிகளை வழங்கவும்.
- சொற்களை எண்ணும்போது நிதானமாகக் கணக்கிடவும்.

4.

(i) இருவரும் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் மகா மேதைகள், தர்க்கம் செய்வதில் வல்லவர்.

(ii) வாதம் செய்வதில் வல்லவர்.

(iii) வித்துவான் சிரோமணி பொன்னம்பலப்பிள்ளை, மகாலிங்க சிவம், சுவாமி விபுலானந்தர், தெல்லிப்பளை வித்துவான் சிவானந்தையர், புலோலி கதிரவேற்பிள்ளை, ஆறுமுகநாவலர்
(எவையேனும் நான்கு விடைகளுக்கு இரண்டு புள்ளிகள்)

(iv) இலக்கிய இரசனையில் ஈடும் எடுப்பும் இல்லாதவர்
உரைநயம் கூறுகின்ற உரையாசிரியர்
இவருக்கு பின்தோன்றிய பலருக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர்

(v) தம்முடைய படைப்புகளில் இலக்கிய இரசம் வெளிப்படுத்திக் கொண்டே இருந்தனர்.

**5. கடிதம்**

| | |
|---|---|
| அமைப்பு | - 05 |
| உள்ளடக்கம் | - 07 |
| மொழிநடை | - 03 |
| **மொத்தம்** | **- 15 புள்ளிகள்** |

**உள்ளடக்கம்**

பரவும் முறைகள்

- பிற பிரதேசத்தவர்கள் தமது கழிவுகளை இப்பிரதேசத்தில் வீசி எறிதல்.
- தொற்று நோய்கள், சுவாசம் தொடர்பான நோய்கள் பரவக்கூடிய ஆபத்தான நிலை.
- சூழல் மாசடைவு
- நாய் முதலான விலங்குகள் இக்கழிவுகளை இழுத்துச் செல்லுதல்.

தடுக்கக்கூடிய வழிமுறைகள்

- ஏனைய பிரதேசத்தவருக்கு இவ்விடயம் தொடர்பாக அறிவுறுத்தல்
- கண்காணிப்பு சாதனங்கள் ஊடாக கண்காணித்தல். (CCTV)

மொழிநடை

- பொருத்தமான மொழிநடை
- நிறுத்தற்குறி பிரயோகம்
- வழுக்கள் இன்மை
- சுட்டிப்பாகக் கூறுதல்

**பத்திரிகைச் செய்தி**

**பொருத்தமான தலைப்பு**

கிராமிய மக்களின் உற்பத்திகள்

- ஆடை தயாரிப்பு
- முகமூடி தயாரிப்பு
- பின்னல் தொழில் (பாய், கூடை)
- மட்பாண்டம் வனைதல்

பிறர் கொள்வனவு செய்வதனால் ஏற்படக்கூடிய நன்மைகள்

- உற்பத்தியாளர் ஊக்குவிக்கப்படல்
- உற்பத்தியாளர்களின் சீவனோபாயம் சிறப்பாதல்
- நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடையும்
- தொழில் வாய்ப்பு அதிகரிக்கும்

உற்பத்தியாளர்களுக்கு வழங்கக்கூடிய ஊக்குவிப்புகள்

- விளம்பரப்படுத்தல்
- உற்பதியாளர்களுக்கு மானியம் வழங்குதல்
- சந்தை வாய்ப்பை மேம்படுத்தல்

## பகுதி III

## புள்ளியிடும் திட்டம்

01..

I. i. கம்பியூட்டர் / கணினி / கணிப்பொறி
ii. ஏமாற்றுதல் / நம்பிக்கைத்துரோகம் செய்தல்

II. i. சபையில் நிலவிய அமைதி
ii. புயல்

III. i. வலை
ii. ஜலசா / ஏலேலோ

IV. i. பொருந்தாத ஒழுக்கத்தில் ஆசை கொள்ளுதல் / தனக்கு நன்மை தராத / பயன் தராத செயலில் விருப்பத்துடன் ஈடுபடுதல்
ii. விருப்பம் / ஆசை

V. i. பாண்டியன் நெடுஞ்செழியன் / நெடுஞ்செழியன் / பாண்டியன்
ii. துன்பம்

VI. i. காசீம்
ii. கம்பீரம் / வலிமை

VII. i. கைம்மாறு கருதி அறத்தை மேற்கொள்வோர் / பயனை எதிர்பார்த்து அறத்தை மேற்கொள்வோர்.
ii. இவ்வுலகம் / இவ்வுலகவாழ்வு / மண்ணுலகம் / மண்ணுலகவாழ்வு

VIII. i. பாரி மன்னன்
ii. அங்கவை, சங்கவை / பாரிமகளிர்

IX. பகிர்ந்து உண்ணாத / கொடுத்து உண்ணாத இயல்பு / பண்பு உள்ளவர்களின் அயலில் வாழ்தல்
ii. பகிர்ந்து / கொடுத்து

X. i. காதலியைப் பார்க்காது விடின் இறந்து விடுவேன் எனக் கூறுதல்
ii. காதலியின் முகத்தை தாமரைக்கு ஒப்பிடுவதன் மூலம்

02.

I. i. காதலியின் வருகைக்காக ஆவலுடன் காத்திருத்தல், அவளுடைய வருகை, புன்னகையில் காதலனுக்கு காதல் உணர்வு மிகுதல்.
ii. சுதந்திரத்தை விரும்பாத ஆட்சியாளர்கள், இத்தகைய ஆட்சியாளர்களுக்காக சுதந்திரத்தை வேண்டி போராடுகின்ற தேசபக்தர்களை கொலை செய்கின்ற படைவீரர்கள்.

II. i. பனைமரம் - வானளாவி உயர்ந்து வளரும், இனிமையான பழமும் திரண்ட பெரிய விதையும் கொண்டது, ஒருவர் இருப்பதற்காயினும் நிழல் தராது.
ஆலமரம் - சிறிய நுண்மையான விதையில் இருந்து தோன்றிய பெரிய விருட்சம், பலர் இருப்பதற்கு நிழல் தரும்.
ii. உருவத்தை வைத்து ஒருவரை பெயரியவர் என்றோ சிறியவர் என்றோ கருதுதல் கூடாது. மாறாக அவர் பிறருக்கு எவ்வாறு பயன்படுகின்றார் என்பதைப் பார்த்தே ஒருவரை பெரியவர், சிறியவர் எனக் கருதுதல் வேண்டும்.

III. i. மனதிலே கொடிய சினம் உண்டாதல், நாவிலிருந்து வார்த்தைகள் விரைவாகவும் தடுமாற்றத்துடனும் வெளிவருதல், விரைவாக எழுதல்
ii. தருமனை ஊனம் இல்லாதவன் (இழிவாக) என்றும் மானம் இல்லாதவன் என்றும் குறிப்பிடுதல், தருமனது வார்த்தைகள் பயனற்றவை / பொருளற்றவை எனல்

IV. i. சினிமாமொழி பிறமொழிகளால் மொழிபெயர்க்க முடியாதது. சினிமாமொழி மனிதர்கள் அனைவருக்கும் பொதுவானது
ii. சினிமாவை ஒரு கலையாக மட்டுமன்றி அக்கலைக்குரிய தனித்துவப்பண்பை அறிந்து கொண்டு நோக்குதல் வேண்டும்.

V. i. கிரேக்கர் - கிரேக்கர்கள் மட்டும் உயர்ந்தவர்கள் என்றும் ஏனைய மனிதர்கள் தங்களைவிட தாழ்ந்தவர்கள் என்றும் கருதுதல்

வடஆரியர் - இமய மலைக்கும் விந்திய மலைக்கும் இடைப்பட்ட நிலத்தை புண்ணிய பூமி எனக் கருதுதல்.

ii. கிரேக்கரும் வடஆரியரும் தம்மை உயர்ந்தவராகவும் ஏனைய மனிதர்களை தாழ்ந்தவர்கள் என்றும் கருதிய நிலையில் தமிழ் மக்கள் அனைத்து மனிதர்களையும் சமம் என்று கருதினர்.

03. குகப்படலம்

I. உவமைகள்

- இராமனைப் பிரிந்த கோசலையின் துயரினை கன்றைப் பிரிந்த காராம்பசுவின் துயருடன் ஒப்பிடுதல் - கற்றுபிரி காராவின் துயர் உடைய கொடி
- குகனது தோளின் வலிமையையும் உயர்ந்து தோன்றுகின்ற தன்மையினையும் மலையுடன் ஒப்பிட்டுக் கூறுதல் - குன்றனைய திருநெடுந் தோள், விலங்கல் திண்டோள்
- குகனது ஆற்றலை ஆண் யானையுடன் ஒப்பிட்டுக் கூறுதல் - கைவீரக் களிறு அனைய காளை
- பரதன், கோசலை, சுமித்திரை, கைகேயி உள்ளிட்டோர் சென்ற ஓடத்தின் தோற்றத்தினையும் அது நீரில் சென்ற காட்சியினையும் இறக்கை இல்லாத அன்னத்துக்கு ஒப்பிடுதல் - அன்னப்பேடை சிறைஇலது ஆய்கரை துன்னிற்று

உருவகங்கள்

- துயர்கடல்
- கருணை ஆர் கலி
- பழி வளர்க்கும் செவிலி

II. கோசலை கூற்றிலிருந்து இராம இலக்குவணர்களின் சிறப்பு காட்டப்பட்டுள்ளது.

- மெய் வீரர் (இராம இலக்குவன்)

இராமன்

- மூன்று உலகங்களையும் படைத்தவனான நான்முகனை தனது திருவுந்தியிலே இருந்து தோற்றுவித்தவன் (கவி கூற்று)
- எல்லோரும் வணங்கத்தக்க தோற்றம் உடையவன் (பரதன் கூற்று)
- கருணை ஆர் கலி (கவி கூற்று)
- தனது நீண்ட உருவத்தால் உலகளந்தவன்.
- இலக்குவன்
- இராமனுக்கு பின் பிறந்த அவனது தம்பி (பரதன் கூற்று
- இராமனை எப்போதும் பிரியாதவன் (பரதன் கூற்று)

தத்தைவிடு தூது

01. காதலியின் கண்ணின் அழகினை மானேங்கு மை விழி எனவும் வாள் விழி எனவும் சிறப்பித்துக் கூறுதல்

- இடையழகினை வஞ்சியிடை, பைந்தொடி எனக் கூறுதல்.
- காதலியின் முக அழகினை தாமரை மலருடன் ஒப்பிடுதல் (கஞ்சமுகம்)
- காதலியின் நடையழகினை அன்னநடை எனல்.
- காதலியின் பேச்சின் இனிமையை கன்னன்மொழி எனல்
- காதலியின் கூந்தலின் அழகினை பைந்தார் பசுங்குழல் எனல்
- காதலியை தேடி அடையமுடியாத நல்ல இரத்தினம், அழகாக மலர்ந்திருக்கின்ற மரக்கிளை, என் இதயமாகிய தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமி, பெண்களின் அரசி, கோதை என பலவாறு அழைத்தல்.

02. காதலியைப் பிரிந்ததால் தான் அடைந்த துயரினை கிளியிடம் சொல்லி இரங்குதல்.

- காதலியை அடையாவிட்டால் சந்நியாசம் மேற்கொள்வேன் எனல்.
- காதலியைப் பிரிந்ததனால் தான் நலிவடைந்ததாகக் கூறுதல்.
- காதலியின் நிலை தன்னுடைய உயிரை மாய்ப்பதாகக் கூறுதல்.
- காதலியை அடையாவிட்டால் இறந்துவிடுவேன் என்று கூறுதல்.
- காதலியின் பிரிவால் உணர்ச்சி மேலிட்டு தான் செய்வதறியாது திண்டாடுவதாகக் கூறுதல்.

04. கம்பியூட்டர்

I. புதிதாகப் பிறந்த குழந்தை வீட்டை அடியோடு மாற்றுவது போல குடும்பத்தை கம்பியூட்டர் மாற்றியது.

- அவரது குடும்பம் ஒரு விஞ்ஞானத்துள்ளல் துள்ளி வேகமாக முன்னேறியது.
- குடும்ப உறுப்பினர்கள் கம்பியூட்டர் பரிபாசையில் உரையாடுதல்.
- கதைசொல்லியின் மனைவி வீட்டுக்கணக்குகளையும் சீட்டுக்கணக்குகளையும் கணிப்பொறியில் மேற்கொள்ளல். தனது மேகலா என்ற பெயரை மெகா என மாற்றிக் கொள்ளுதல்.
- கதைசொல்லியின் மகன் அரவிந்தன் தன் நண்பர்களுடன் கேம்ஸ்களை பண்டமாற்று செய்தலும் புதிய தலைமுறைக் கணிப்பொறிகள் பற்றி விவாதமும் பட்டிமன்றங்களும் நடத்துதல். அவர்களது பொழுது முழுவதுமாக கணிப்பொறியுடன் கழிதல்.
- கதைசொல்லி கணிப்பொறியில் தனது சிறுகதையை எழுதுதல்.
-

II. வெறுப்பு
- கணிப்பொறியில் முதன் முதல் எழுதிய கதை தொலைந்து போனமை.
- கணிப்பொறியை சனியன் எனக் குறிப்பிடுதல்.
- கணிப்பொறி தனக்குச் செய்த நம்பிக்கைத் துரோகத்தை மன்னிக்க முடியாது எனல்.
- கணிப்பொறியை தான் திரும்பியும் பார்ப்பதில்லை எனல்.
- கணிப்பொறியை பார்த்தால் அதைக் கொன்றுவிட வேண்டும் என்ற எண்ணம் தனக்கு வருவதாகக் குறிப்பிடுதல்.
- நண்பரிடம் கணிப்பொறி செய்த துரோகத்தைச் சொல்லி அழுதல்.
- கணிப்பொறியில் தனக்கு தத்து இருப்பதாக கூறுதல்.

விருப்பு
- எதிர்பாராத விதமாக தொலைந்த தனது கதையை மீண்டும் கணிப்பொறியில் கண்டதால் கணிப்பொறி மீது விரும்பம் உண்டாதல்.
- பெற்றோரை ஏமாற்றி வந்த காதலியைப் பார்ப்பது போல கணிப்பொறியை ஆவலோடு பார்த்தல்.
- கம்பியூட்டர் தன்னை நட்புடன் பார்ப்பதாகக் குறிப்பிடுதல்.

**இலட்சியமும் சமநோக்கும்**

I. குறுந்தொகைத் தலைவி தனது இலட்சியம் நீரைவிட ஆழமானதும் நிலவுலகைவிட பரந்ததும், வானைவிட உயர்ந்தது என்று கூறுவதன் ஊடாக இலட்சியத்தை விட எதுவும் பெரிதில்லை என்பதை தெளிவுபடுத்துகின்றாள்.

II. அருச்சுனன் உயிரைவிடவும் மேலானது இலட்சியம் எனக் கூறுவதன் ஊடாக உயிருக்கும் மேலாக இலட்சியத்தைக் கருதுகின்றான்.

III. அரிச்சந்திரன் நாடு, செல்வம், மனைவி, பெற்ற பிள்ளை என்பவற்றுக்கு மேலாக தனது இலட்சியத்தை கருதுகின்றான். இலட்சியத்தின் பயனாகிய வீடுபேற்றைவிடவும் மேலானதாக இலட்சியத்தைக் கருதுகின்றான்.

05. எது நல்ல சினிமா?

I.
- கதாபாத்திரங்கள் சதுரமான மேடையின் விளிம்பிலிருந்து வருதல்
- வசனத்தைப் பேசிவிட்டு பக்கவாட்டில் சென்று மறைதல்
- கத்திப் பேசுதல், பேசிக்கொண்டேயிருத்தல், படம் முழுவதும் பின்னணி இசை

II.
- தமிழில் நாடகங்களே முதலில் சினிமாவாக மாற்றப்பட்டமை.
- ஆரம்பத்தில் நாடகக் கம்பனிகளே சினிமாவிலும் ஆர்வம் காட்டியமை.
- தமிழ் சினிமாவில் இயக்குனர்கள், நடிகர்கள், வசனகர்த்தாக்கள், பாடலாசிரியர்கள் என அனைவரும் நாடகத்தில் இருந்து வந்தவர்கள்.
- இதனால் நாடகத்தின் இயல்பை சினிமாவிலும் இவர்கள் கொண்டுவந்தார்கள்.

06. தனிப்பாடல்கள்

I. பாம்பு படமெடுத்தாடி பின் குடத்தினுள் புகுந்து கொள்ளும். எள்ளு செக்கில் இட்டு ஆட்டப்பட்டு எண்ணெய் எடுக்கப்பட்டு குடத்தில் வைக்கப்படும்.
- பாம்பு படமெடுத்து ஆடும் போது சீறும். எள்ளு செக்கில் இட்டு ஆட்டப்படும்போது இரைச்சல் உண்டாகும்.
- குடத்தைத் திறந்து உள்ளே இருக்கும் பாம்பைப் பார்த்தால் அது தன் தலையை மேல் நோக்கிக் காட்டும். எண்ணெய் உள்ள குடத்தைத் திறந்து பார்த்தால் பார்ப்பவரின் முகம் (விம்பம்) எண்ணெயில் தெரியும்.
- பாம்பு தீண்டினால் உடலில் விஷம் ஏறி பரபரப்புத் தோன்றும். எண்ணெயைத் தலையில் வைத்தால் அதன் குளிர்ச்சி காரணமாக பரபரப்புத் தோன்றும்.
- பாம்புக்கு பிளந்த நாக்கு உண்டு. எள்ளில் இருந்து எண்ணெய் எடுத்தால் எஞ்சுவது பிண்ணாக்கு.

II. - சேறு நிறைந்த வயல்கள், பலாக்கனிகள், இளநீர், சங்கு காணப்படல் - என்பன உழவர் மற்றும் குரங்குகளின் செயற்பாடுகளினூடே வெளிப்படுத்தல்

07. I, II

முல்லையும் மருதமும் கலந்து காணப்படுகின்றது.
- செந்நெல் வயல்கள், உழவனின் வியர்வை, மலை போன்ற தோள்கள், சோலைகள் அழகிய குளங்கள் கொண்டது.
- மந்திகள், குயில்கள், மயில்கள், வண்டு, பசுக்களின், குருவி, அணில், எறும்பு, காகம், மீன்கள் என்பவற்றின் செயல்களால் அழகு பெற்றுக் காணப்படுகின்றது.
- உயர்ந்த பண்பு கொண்ட மனிதர்கள் வாழ்தல்
- உழைத்துண்ணுதல், சத்தியத்தால் தலைநிமிர்தல், அறிவால் தலைதாழ்தல், இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக மதித்து நடத்தல்

**குறிப்பு: பகுதி I, II என்பவற்றிற்கு விடைக் குறிப்புகளே தரப்பட்டுள்ளன. முழுமையான விடைகளல்ல**